இனிமையான குழந்தைகளே! இந்த ஞானத்தில் முதிர்ச்சி (பண்பட்ட நிலை) என்ற குணத்தை தாரணை செய்வது மிக அவசியமாகும், ஒருபோதும் தன்னுடைய அபிமானம் வரக்கூடாது, தாய்மார்களுக்கு மதிப்பு கொடுங்கள்"

கேள்வி: அனைத்து குழந்தைகள் மீதும் பாபாவின் ஆசை என்ன? அதை எப்போது பூர்த்தி செய்ய முடியும்?

பதில்: குழந்தைகள் லஷ்மி-நாராயணன் ஆகிக் காட்டும் அளவிற்கு முயற்சி செய்ய வேண்டும், என்பது பாபாவின் ஆசையாகும். இதில் தான் பாபாவின் வெளிப்பாடு ஏற்படும். அதுபோன்ற காட்சியை வெளிப் படுத்துங்கள், அதன்மூலம் பாபாவின் புகழும் பாடப்பட வேண்டும், குழந்தை களுடைய புகழும் பாடப்பட வேண்டும். பாபா கூறுகின்றார்: குழந்தைகளே! ஒருவேளை நீங்கள் நரனிலிருந்து நாராயணன் ஆகிவிட்டீர்கள் என்றால், உங்களுக்கும் கோவில்கள் உருவாகும் நமக்கும் கோவில்கள் உருவாகும். அப்படி பூஜிக்கத்தக்கவர் ஆவதற்கு தந்தையைப் பின்பற்றுங் கள். தங்களிடம் தாங்களே உறுதிமொழி செய்யுங்கள்--நாங்கள் முழுமையாகப் பின்பற்று வோம்.

பாடல்: எந்த நாளிலிருந்து நாம் இருவரும் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.............

ஓம் சாந்தி! குழந்தைகளுக்கு வாசனை வருகிறது - குழந்தைகள் உணருகிறார்கள். ஆக கண்டிப்பாக நாம் புதிய உலகத்திற்காக அனைத்தையும் புதிய விஷயங்களாக கேட்கிறோம். இது நமக்கு புதியதாக இருக்கிறது. வேறு யாருக்காகவும் பரமபிதா பரமாத்மா நேரடியாக உடன் இருப்பதில்லை. ஆக இது புதிய விஷயம் அல்லவா? பாபா தூய்மையற்றவர்களைத் தூய்மையாக்குபவர் என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பழைய உலகம் தூய்மையற்றது என்றும், புதிய உலகம் தூய்மையானது என்றும் சொல்லப்படுகிறது. ஆக உங்களுடைய அன்பு புதிய உலகத்தின் மீது ஈடுபடும். இப்போது நம்முடைய அன்பு புதிய உலகம் சொர்க்கத்தின் மீது இருக்கிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். அதை சிவாலயம் என்று சொல்லப் படுகிறது, இதை விகாரங்கள் நிறைந்த உலகம் என்று சொல்லப்படுகிறது. முற்றிலும் இங்கே விகாரம் நிறைந்த மனிதர்கள் இருக்கிறார்கள். சத்யுகத்தில் விகாரமற்ற மனிதர்கள் இருக்கிறார் கள் என்றால் சிவாலயம் என்று சொல்ல வேண்டும் அல்லவா? சிவபாபா தான் அதுபோன்ற விகாரமற்ற உலகத்தை ஸ்தாபனை செய்கின்றார். எந்த தேவதைகள் புதிய உலகத்தில் இருந்தார்களோ அவர்களுடைய சித்திரம் இந்த பழைய உலகத்தில் இருக்கிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பாரதவாசிகளோ அனைத்தையும் மறந்து விட்டார்கள், அவர்கள் இந்துஸ்தான், என்று சொல்லி விட்டார்கள். இந்துஸ்தான் நமக்கு பிடித்தமானது, ஆமாம், கண்டிப்பாக பிடித்தமானதாக இருந்தது. ஆனால் உண்மையில் இந்துஸ்தானம் என்ற பெயர் இல்லை. பாரத கண்டம் என்று அழைக்கப்பட்டது. இது முற்றிலும் புதிய விஷயமாக இருக்கிறது, என்பதை குழந்தைகள் தெரிந்துள்ளார்கள். இது போன்ற விஷயங்களை ஒருபோதும் கேட்டதில்லை. இந்த ஞானம் உலகத்திலிருந்து முற்றிலும் தனிப்பட்டதாகும். பாரதவாசிகளின் கோவில்கள் கூட நிறைய இருக்கிறது. கிறித்தவர்களுக்கு ஒரே ஒரு சர்ச் மட்டுமே இருக்கிறது. பிறகு வேண்டுமானால் தனித்-தனி சர்ச்சுகள் உருவாக்குவார்கள்.

சத்யுகத்தில் எந்த கோவிலும் கிடையாது, ஏனென்றால் உயிரோட்டமுள்ள தேவதை களின் இராஜ்யம் நடக்கிறது. தேவதைகள் சிவாலயமான புதிய உலகத்தில் இராஜ்யம் செய்திருந்தார்கள். இப்போது நாம் புதிய உலகத் திற்குச் சென்று கொண்டிருக்கிறோம், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பாபா இந்த புதிய கட்டிடத்தை ஏன் கட்டியுள்ளார், என்ற சிந்தனை ஒரு போதும் வரக்கூடாது. உண்மையில் பழைய உலகத்தில் இதுவும் கூட பழையதாகும். இப்போது நம்முடைய அன்பு புதிய உலகத்தின் மீது ஈடுபட்டிருக்கிறது. ஆத்மாக்களுக்கு பரமாத்மா மீது அன்பு ஈடுபட்டிருக்கிறது, அவர் முன்னால் அமர்ந்திருக்கிறார். பிரம்மா குமார- குமாரிகளுக்கு பிரம்மாவிடம் அன்பு ஈடுபட்டிருக்கிறது, என்று மனிதர்கள் புரிந்து கொள்கிறார்கள். ஒரு சிவபாபாவிடம் தான் நம்முடைய அன்பு, என்று நீங்கள் புரிந்துள்ளீர்கள். வேறு யாரும் இல்லை. உங்களுடைய பெயர் பி.கு.-வாக இருக்கலாம், ஆனால் உங்களுடைய அன்பு பிரம்மாவுடன் இல்லை. இந்த பிரம்மா தேகதாரி அல்லவா? பிறப்பு-இறப்பில் வருகிறார். நீங்கள் தேகத்தோடு உறவை இணைக்கக் கூடாது. அந்த குருமார்கள் தங்களுடைய பெயரை சச்சிதானந்தன், என்று வைத்துக் கொள்கிறார் கள். ஆனால் சத்-சித்-ஆனந்த சொரூபம், என்று ஒரு பரமாத்மாவைத்தான் சொல்லக்கூடும். ஆத்மா சத்-சித்-ஆனந்த ரூபமானதாகும், சாந்தி ரூபம், ஞான ரூபமாக இருந்தது. இப்போது நீங்கள் மீண்டும் இந்த சங்கமயுகத்தில் அப்படி ஆகின்றீர்கள். எப்படி பாபாவினுடைய மகிமை ஞானக் கடல், அமைதியின் கடல்......... என்று இருக்கிறதோ, நீங்களும் கூட சத்-சித்-ஆனந்த ரூபமாக இருக்கிறீர்கள். விதை மற்றும் மரத்தை நினைவு செய்வதின் மூலம் முழு ஞானமும் வந்து விடுகிறது. முற்றிலும் 5 யுகங்கள் இருக்கின்றன. இப்பொழுது சங்கமயுகமாகும். இந்த சங்கமயுகத்தை உலகம் தெரிந்திருக்க வில்லை. அப்படியே தெரிந்திருந்தாலும் கூட, விரிவாகத் தெரிந்திருக்கவில்லை, சத்யுகத்தில் யார் இராஜ்யம் செய்தார்கள்? எப்படி இராஜ்யத்தை அடைந்தார்கள்? இப்போது நீங்கள் இராஜ்யத்தை அடைந்து கொண்டிருக் கிறீர்கள். மறுபிறவி எடுத்து கண்டிப்பாக சக்கரத்தில் வரவேண்டும். எப்போதும் சொர்க்கத்தில் யாரும் இருக்க முடியாது. சொர்க்கம் மற்றும் நரகத்தின் அறிமுகம் இப்போது கிடைத்திருக்கிறது. இப்போது கலியுகமாக இருக்கிறது, பிறகு சத்யுகமாக ஆகும். ஆக கண்டிப்பாக சங்கமயுகத்தில் தான் பரமபிதா பரமாத்மா வந்திருப்பார். அவருடைய மகிமையே தனிப்பட்டதாகும். ஒருவருடைய மகிமை மற்றவருக்கு இருக்க முடியுமா என்ன? ஒவ்வொருவருடைய கடமை அவரவரு டையது, சம்ஸ்காரம் அவரவருடையது, ஒருவருடையது மற்றவருடையதோடு ஒன்றாக முடியாது. ஒவ்வொரு ஆத்மாவிலும் அதனதனுடைய பாகம் அமைந்துள்ளது. ஆத்மா 84 பிறவிகள் எடுக்கிறது, என்பது குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளது. நீங்கள் புதிய விஷயங்களைக் கேட்கிறீர்கள். கீதையின் பகவான் கிருஷ்ணர், என்று உலகம் புரிந்து கொண்டிருக்கிறது. கிருஷ்ணர் கீதையின் பகவான் இல்லை என்று, இப்போது பாபா கூறுகின்றார். பகவானுடைய மகாவாக்கியம்--நான் உங்களுக்கு இராஜயோகம் கற்றுக் கொடுத்து உங்களை இராஜாவுக்கெல்லாம் இராஜாவாக, அதாவது நரனிலிருந்து (ஆண்) நாராயணனாக, நாரியிலிருந்து (பெண்) இலஷ்மியாக மாற்றுகிறேன். நீங்கள் சூரிய வம்ச நாராயணனாக ஆவீர்களா? அல்லது சந்திரவம்ச இராமனாவீர்களா? என்று பாபா கேட்கவும் செய்கிறார். பாபா! சூரியவம்சத்தைச் சேர்ந்தவர்களாக ஆவது தான் குறிக்கோளாகும், என்று கூறுகிறார்கள். வரிசைக்கிரமம் இருக்கிறது அல்லவா? வக்கீல்களில் சிலர் நன்றாக இருக்கிறார்

கள், சிலர் சாதாரணமாக இருக்கிறார்கள். சில டாக்டர்களோ இலட்சங்கள் சம்பாதிக்கிறார்கள், சிலர் மிகவும் குறைவாக சம்பாதிக்கிறார்கள். அனைத்தும் படிப்பில் தான் ஆதாரப்பட்டிருக் கிறது. உங்களில் கூட சில பேர் நிறைய சம்பாதிக்கக் கூடியவராக ஆவீர்கள், சிம்மாசனத்தில் அமருவீர்கள். இது பெரிய எல்லை யற்ற ஈஸ்வரிய கல்லூரியாகும். இவ்வளவு பேர் தேர்ச்சி பெறுவார்கள் என்று அந்த கல்லூரிகளில் எல்லை இருக்கிறது. இது எல்லையற்ற கல்லூரி யாகும். ஆக நீங்கள் புதிய விஷயங்களைக் கேட்கிறீர்கள். அபலைகளான உங்களுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியவர் அந்த பரமபிதா பரமாத்மா தான், என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். பரமாத்மா தந்தையிடமிருந்து நமக்கு எவ்வளவு பலம் கிடைக்கிறது, என்பதை தெரிந்துள்ளீர்கள். நாம் படை வீரர்களாக இருக்கிறோம். யுத்த மைதானத்தில் நின்று கொண்டிருக்கிறோம். புதிய விஷயம் அல்லவா? கீதையில் பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களின் சண்டை காட்டப்பட்டிருக்கிறது, ஆனால் சண்டையின் விஷயம் எதுவும் இல்லை. ஒவ்வொரு விஷயமும் புதியதாகும். கிருஷ்ணர் பகவான் இல்லை, அவர் புதிய உலகத்தின் முதல் இளவரசராக (அல்ஃப்) இருக்கிறார். ஆரம்பத்திலிருந்து அனைத்தும் புதிய விஷயங்களாகும். புதிய உலகத்தின் முதல் இராஜா-இராணி லஷ்மி-நாராயணன் ஆவர், பிறகு அவர்களுக்குப் பின்னால் அவர்களுடைய குழந்தைகள் வருவார்கள். ஆக லஷ்மி-நாராயணன் சத்யுக மனித சிருஷ்டியின் முதல் மனிதர்கள் ஆவர். இங்கே மனித சிருஷ்டியின் படைப்பவர் தலைவர் பிரம்மா ஆவார். முதல்-முதலில் பரமபிதா பரமாத்மா அல்லா. பிறகு பிரம்மாவைத் தலைவராக ஆக்குகிறார்.பிறகு இலஷ்மி-நாராயணனை தலைவராக ஆக்குகிறார். இங்கே நீங்கள் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள். பிராமண குலத்தின் தலைவர் பிரம்மா, என்று தான் பாடப்பட்டிருக்கிறது. அவர்களும் பிராமணர்கள் தான் என்றாலும் கூட பிரம்மா குமார-குமாரிகள், என்ற பெயர் ஒருபோதும் கேள்விப்படவில்லை. கீதையில் கூட இந்த பெயர் இல்லை. ஆக புதிய விஷயம் அல்லவா? பாரதத்தை ஹிந்துஸ்தானம் என்று சொல்லும் காரணத்தினால் ஹிந்து தர்மம், என்று சொல்லி விட்டார்கள். தங்களுடைய பழமையான தர்மத்தின் அறிமுகம் இல்லை. எப்படி தேவதா தர்மம் இல்லையோ, அது போலாகும். தங்களுடைய தர்மத்தைத் தெரியாத காரணத்தினால், அனைத்து தர்மங்களும் ஒன்று தான், என்று கூறுகிறார்கள். அனைத்து தர்மத்தைச் சேர்ந்தவர்களும் இங்கே இருக்கலாம், யார் வேண்டுமானாலும் இருக்கலாம், சுதந்திரம் இருக்கிறது. அனைத்து தர்மங் களையும் ஏற்றுக் கொள்கிறார்கள். எந்த தர்மத்தைச் சேர்ந்தவர்கள் வேண்டுமானாலும் இங்கு இருக்க முடியும். வெளியில் பாருங்கள் அவர்கள் மற்ற தர்மத்தைச் சேர்ந்தவர்களை வெளி யேற்றிக் கொண்டே இருக்கிறார்கள். இலங்கை, பர்மா போன்ற நாடுகளிலிருந்து இந்தியர்களை வெளியேற்றிக் கொண்டே இருக்கிறார்கள். பாரதம் உண்மையில் பழமையான தேவி-தேவதா தர்மத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. ஆனால் யார் வேண்டுமானாலும் வந்து இருக்கலாம், என்று அவர்கள் கூறுகிறார்கள். அனைவரும் ஒன்றாக இருக்க முடியாது. ஆங்காங்கே தர்மங்களின் சண்டை சச்சரவு உள்ளது. பாரதம் அனைத்து தர்மங்களுக்கும் அடைக்கலம் தரும் என்கின்றார் கள். எனவே பாரத தேசத்திற்கு மகிமை உள்ளது. இப்போது நீங்கள் அனைத்தும் புதிய விஷயங் களாகக் கேட்கின்றீர்கள். இந்த சமயம் பாரதத்தில் தேவி-தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை. நாம் புதிய உலகத்திற்காக முயற்சி செய்து

கொண்டிருக்கிறோம். சிவபாபா சொர்க்கத்தைப் படைக்கின்றார். அனைவருமே பிரம்மாவின் குழந்தைகள் தான் என்றாலும் குறிப்பாக பிராமணர்கள் பாடப்பட்டிருக்கிறார்கள். அவர்களை எப்போது படைத்தார்? கண்டிப்பாக சங்கமயுகத்தில் தான் படைத்தார். வர்ணங்களைக் (பிரிவுகள்) கூட மிக நல்ல விதத்தில் காட்ட வேண்டும்.பிராமணர்களாகிய நாம் உச்சிக்குடுமி பிறகு தேவதைகள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்களாக ஆகிறார்கள். ஆக இந்த ஞானம் மிகவும் ஆழமானதும், மனமகிழ்ச்சி தரக் கூடியதும் ஆகும். யாரோ ஒரு சிலருடைய புத்தியில் தான் நிற்கிறது.

குழந்தைகளாகிய நீங்கள் இந்த ஞானத்தை நல்ல விதத்தில் தாரணை செய்யுங்கள், ஒருபோதும் பிராமணி யிடம் (டீச்சர்) கோபித்துக் கொள்ளக் கூடாது. கோபித்துக் கொண்டு படிப்பை விடக் கூடாது. இல்லை என்றால் நரகத்திலும் மோசமான நிலைக்குப் போய்விடுவீர்கள். பாபா சொல்வதற்கு வந்திருக்கின்றார் என்றால் கேட்க வேண்டும். பக்தி மார்க்கத்தில் கீதையைக் கேட்பதற்கு எவ்வளவு நியமங்கள் இருக்கின்றன, அவர்கள் முழு நியமத்தோடு கேட்கிறார்கள். கோவிலுக்குக் கூட நியமப் பூர்வமாக செல்கிறார்கள். தினமும் உறுதியான நியமம் வைக் கிறார்கள். உங்களுடைய நியமம் மிகவும் கடுமையானதாகும். அரை மணி, ஒரு மணி.......... பிறகு அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும். பாபாவை நினைவு செய்வதின் மூலம் புத்தியின் பூட்டு திறக்கும். சிவபாபா ஒன்றும் ஞான சிந்தனை செய்வதில்லை, அவருக்கு ஞானத்தை சிந்தனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. யாருக்கு எப்படிப் புரியவைப்பது?, என்று நீங்கள் சிந்தனை செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆக ஒருபோதும் கோபித்துக் கொள்ளக் கூடாது. ஒருவர் மற்றவருக்கு மதிப்பு வைக்க வேண்டும். நிறைய குழந்தைகளுக்கு மகாரதிகளுக்கு மதிப்பு கொடுக்க வருவதில்லை. அதிலும் பிராமணிகள் மிக முக்கிய மானவர்கள். 10-12 பேர்களையாவது தனக்குச் சமமாக மாற்றுகிறார்கள் அல்லவா? ஆகவே அவர்களுக்கு மதிப்பு வைக்க வேண்டும். நீங்கள் சிவபாபாவின் பிரதிநிதி போல் ஆவீர்கள். அனைத்து பிரதிநிதிகளும் ஒன்று போல் இருப்பதில்லை. வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் என்றாலும் ஏஜெண்டாக இருக்கிறார்கள் அல்லவா? சிலரோ மிக நல்ல விதத்தில் தாரணை செய்கிறார்கள். இரவும்-பகலும் சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். சிவபாபாவும் கூட இங்கே சேவைக்காகத் தான் வந்திருக்கிறார் அல்லவா? நான் இரட்டை வேலை செய்கிறேன், என்று பாபா கூறுகின்றார். பக்தர்களுக்கும் கூட சேவை செய்கிறேன். முழு உலகத்திற்கும் காட்சிகளை காண்பிக்கும் காரியத்தை யார் செய்வது? என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். அனைத்தும் நாடகத்தில் முதலிலேயே பதிவாகியிருக்கிறது. தக்க சமயத்தில் காட்சிகள் ஏற்படுகிறது. இறை தந்தை திவ்ய திருஷ்டியின் மூலம் காட்சி செய்வித்தார், என்று புரிந்து கொள்கிறார்கள், அங்கும்-இங்கும் காட்சிகள் ஏற்படுகிறது, இந்த காட்சிகள் கூட நாடகத்தில் பதிவாகியுள்ளது, இதில் பரந்த புத்தி தேவை. இவை புதிய விஷயங்களாகும். சிருஷ்டி சக்கரம் புத்தியில் சுற்ற வேண்டும். சிலருக்கு இந்த சுயதரிசன சக்கரம் நன்கு வேகமாக சுற்றுகிறது சிலருக்கு குறைவாக சுற்றுகிறது. நீங்கள் சுய தரிசன் சக்கரதாரிகள் ஆவீர்கள். சேவைக்காக வரிசைக்கிரமமாக புத்தி ஓடிக்கொண்டே இருக்கும். சிலருக்கு சுயதரிசன சக்கரம் சுற்றுவதே இல்லை. காற்று வீசுகிறது ஆனால் சிலருக்கு மிக வேகமாகச் சுற்றுகிறது, சிலருக்கு மிகக் குறைவாகச் சுற்றுகிறது., சிலருக்கோ

முற்றிலும் சுற்றுவதே இல்லை. சுய தரிசன சக்கரம் சுற்றவில்லை என்றால் என்ன பதவி அடைவார்கள். ஆக இது புதிய விஷயம் ஆகிறது அல்லவா? ஆஸ்தி எடுக்க வேண்டும் என்றால் இப்போதே எடுங்கள், என்று பாபா புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். இல்லை என்றால் பிறகு பச்சாதாபப்படுவீர்கள், அழுவீர்கள். டீச்சரை வெளிக் காட்ட வேண்டும் அல்லவா. இது எவ்வளவு பெரிய கல்லூரியாக இருக்கிறது. நல்ல விதத்தில் படித்தார்கள் என்றால் பதவியும் நல்ல பதவி அடைகிறார்கள். நாங்கள் முழுமையாகப் பின்பற்றுவோம், என்று சத்தியம் செய்ய வேண்டும். தாய்-தந்தையரைப் பின்பற்ற வேண்டும். வக்கீலுடைய குழந்தை வக்கீலாகத் தான் ஆகும், என்பதும் கிடையாது. இல்லை. சிலர் டாக்டர் ஆவார்கள், சிலர் எஞ்சினியர் ஆவார்கள், சிலரோ சைத்தானாக கொள்ளையர்களாகவும் ஆகிவிடுவர். என்னை வெளிபடுத்த வேண்டும் என்றால் நீங்கள் நரனிலிருந்து நாராயணனாக ஆகிக் காட்டுங்கள், என்று பாபா கூறுகின்றார். எனக்கும் புகழ் ஏற்படும், உங்களுக்கும் புகழ் உண்டாகும். நீங்களும் தேவதைகளாக ஆவீர்கள். எனக்கு கோவில்கள் உருவாகும் எனும்போது உங்களுக்கும் உருவாகும். ஒரு சிவபாபாவினுடைய கோவில் முக்கியமானதாக இருக்க வேண்டும். பிறகு அவரோடு பிரம்மா மற்றும் குழந்தைகள். தில்வாலா கோவிலில் வித-விதமாக இருக்கிறது அல்லவா? இது தான் பெரியதிலும் பெரிய நினைவுச் சின்னமாகும். நீங்கள் உயிருள்ளவர்கள் அமர்ந்திருக்கிறீர்கள். சக்திகள் புலியின் மீது சவாரி செய்வது போலவும் மகாரதிகளை யானையின் மீது சவாரி செய்வது போலவும் காட்டுகிறார்கள். யானையை முதலை விழுங்கியது. பாபாவின் நினைவு இல்லை என்றால் மாயை என்ற முதலை விழுங்கிவிடுகிறது. நல்ல-நல்ல மகாரதிகளைக் கூட மாயை முதலை சாப்பிட்டு விடுகிறது. இதில் மிகவும் முதிர்ச்சி அடைந்த (பக்குவமடைந்த) தன்மை வேண்டும் மேலும், நான் இதைச் செய்கிறேன், என்ற அபிமானம் வரக்கூடாது. ஒவ்வொரு விஷயத்திலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தாய்மார்களை முன்னால் வைக்க வேண்டும். தாய்மார் களுக்கு மதிப்பு வைக்க வேண்டும். அனைத்து சாவிகளும் தாய்மார்களின் கையில் இருக்க வேண்டும். தாய்மார்களின் மூலம் செய்திகள் வர வேண்டும். ஆங்காங்கே கன்னியர்கள் அல்லது தாய்மார்களை விட குமாரர்கள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் வழிமுறை கள் கொடுக்க வேண்டும். சட்டம் சர்க்காருடையது, இராஜ்யம் இராணியுடையது என்றொரு பழமொழி இருக்கிறது அதாவது வழிமுறைகள் சகோதரர்கள் சொன்னாலும் முடிவெடுப்பது சகோதரிகளிடம் விடப்பட வேண்டும் என்பதாகும். முதலில் இராணி, பிறகு இராஜா. முதலில் மாதா குரு வேண்டும். ஆண் குரு ஆவதற்கான விதி இல்லை. தாய்மார்களை முன்னால் வைக்க வேண்டும். சட்டம் அப்படிச் சொல்கிறது. சில இடங்களில் ஆண்கள் கூட நிமித்தம் (கருவி) ஆகிறார்கள், அவர்கள் தாய்மார்களை ஞானத்திற்கு அழைத்து வருகிறார்கள், ஆனால் அதிகம் மாதர்கள் தான் செய்திருக்கிறார்கள். நான் அனைத்தையும் தெரிந்திருக்கிறேன், நான் புத்திசாலி, என்ற அகங்காரம் இருக்கக் கூடாது. தாய்மார்களை புத்திசாலிகளாக ஆக்க வேண்டும். மாதர்களின் மூலம் செண்டர் போன்றவற்றை நடத்த வேண்டும். கடைசியில் சன்னியாசிகள் போன்றவர்களுக்குக் கூட தாய்மார்களின் அம்பு தான் தைக்க வேண்டும். ஆகவே விதிமுறைப்படி நடக்க வேண்டும். பரமபிதா பரமாத்மாவை நிந்தனை செய்பவர்கள் உயர்ந்த பதவி அடைய முடியாது. பாபா அனைவருக்கும் எச்சரிக்கை செய்கிறார். மிகவும் இனிமையானவர்களாக ஆக வேண்டும். ஏதாவது விஷயம் பிடிக்கவில்லை

என்றால் ஒரு காதால் கேட்டு மற்றொரு காதின் வழியே விட்டுவிடுங்கள். கோபம் மிகவும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. காமத்தை விட கோபத்தை ஏன் முன்னால் வைக்கக் கூடாது, என்று கடிதம் எழுதுகிறார்கள். ஆனால் அப்படியில்லை. காமம் முதல்-இடை-கடைசி துக்கம் அடையச் செய்விக்கிறது. தூய்மையற்றவர்களை தூய்மையாக்குவது ஒரு பாபா தான், என்பது பாடப் பட்டுள்ளது. சன்னியாசிகள் தூய்மையாக ஆக்க முடியாது. ஆக நீங்கள் புதிய விஷயங்களை கேட்கின்றீர்கள், உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் அமர்ந்து உங்களுக்கு படிப்பிக்கின்றார். அவருக்குத் தான் ஸ்ரீ ஸ்ரீ என்று சொல்லப்படுகிறது. பிறகு மனித சிருஷ்டியில் ஸ்ரீ லஷ்மி, ஸ்ரீ நாராயணன், ஸ்ரீ இராம், ஸ்ரீ சீதை என்று சொல்கிறார்கள். நல்லது அவர்களை அப்படி உயர்ந்தவர்களாக யார் மாற்றியது? ஸ்ரீ ஸ்ரீ சிவபாபா ஆவார். நல்லது.

இனிமையிலும் இனிமையான செல்லமான குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவும் காலை வணக்கமும் உரித்தாகுக. ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் வணக்கம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) தங்களுக்குள் ஒரு வழிப்படி நடப்பவர்களாக ஆகி இருக்க வேண்டும். ஒருவர் மற்றவருக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். கோபித்துக் கொண்டு படிப்பை ஒருபோதும் விடக்கூடாது.

(2) கோபம் மிகவும் நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியது, ஆகையினால் உங்களுக்கு எந்த விஷயம் பிடிக்க வில்லையோ அதை ஒரு காதில் கேட்டு மற்றொரு காதின் வழியே விட்டுவிட வேண்டு கோபப்படக் கூடாது. மிக-மிக இனிமையானவர்களாக ஆக வேண்டும்.

வரதானம்: புத்தி மூலம் சுத்தமான எண்ணங்கள் என்ற உணவை சுவீகாரம் செய்யக்கூடிய சதா தூயமையான அன்னபறவை ஆகுக.

அன்னபறவை ஒருபொழுதும் புத்தி மூலம் ஞானத்தின் முத்துக்களை தவிர வேறு எதையும் சுவீகாரம் செய்துக் கொள்ள முடியாது. பிராமண ஆத்மாக்கள் உயர்ந்த உச்சி குடிமியாக இருக்கிறார்கள். அவர்கள் ஒருபொழுதும் கீழே உள்ள (உலகிய) வி^யங்களில் வரமாட்டார்கள். அன்னபறவை என்றால் சதா சுத்தமானது, சதா தூய்மையானது, தூய்மை தான் சுத்தத்தன்மை யாகும். அன்னபறவைகள் எண்ணத்தில் கூட அசுத்தத்தன்மை ஏற்கமாட்டார்கள். சதா சுத்தமான எண்ணங்களின் உணவை உண்ணக்கூடிய சதா ஆரோக்கியமானவர்களாக இருப்பார்கள். அவர்கள் மீது எவருடைய தாக்கமும் இருக்காது.

சுலோகன்: தனது மனதின் மூலம் சாந்தி குண்டத்தை (அமைதியின் யாகம்) வெளிப்படுத்தக்கூடிய அமைதியை விரும்பும் ஆத்மா ஆகுக.